2014 பிப்ரவரி 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 84, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

84—

தொழிற்சாலை

*****36403**—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரூர் தொகுதி, அரூரில் மாலிப்டினம் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி மாவட்டம், அரூர், ஊத்தங்கரை பகுதிகளில் மாலிப்டினம் தாதுவை வெட்டி எடுத்து வியாபார ரீதியில் உற்பத்தி செய்வது தொடர்பாக இந்திய புவியியல் ஆய்வுக் கழகத்தின் இறுதி ஆய்வு அறிக்கை கிடைக்கப்பெற்றபின், அதற்குரிய தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்டு விரிவான தொழில்நுட்ப பொருளாதார ஆய்வு அறிக்கை தயாரித்து, அங்கு ஒரு தொழிற்சாலை அமைப்பது குறித்து மாண்புமிகு அம்மாவின் அரசு பரிசீலித்து முடிவெடுக்கும் என்பதை பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, இருக்கையில் இல்லை. வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்)

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]